முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

O.S.No.44/2014

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 19 ம் தேதியன்று PW.1 ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்	: கலைமணி	---	:
தந்தை /கணவர் பெயர்	:	தொழில்	:
கிராமம்	:	வயது	:
தாலூக்கா	:	மாவட்டம்	:

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு

வா.சா.1 ன் முதல் விசாரணை :

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக 31.12.1957 ன் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** 04.02.1958 ம் தேதியில் குப்பாயம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**, 26.03.2009 ம் தேதியில் சண்முகம் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3,** 20.12.2012 ம் தேதியில் தாவா 4 ம் அயிட்ட சொத்தை 22 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4,** 06.01.2005 ம் தேதியில் பிரதிவாதிகள் மற்றும் இறந்து போன சண்முகம் ஆகியோர் தாவா 1 ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை 23, 24 ம் பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5**. 22.11.2012 ம் தேதியில் தாவா 4 ம் அயிட்ட சொத்தில் ஒரு பகுதியை 25 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய பத்திரத்தின் ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.6,** அதே தேதியில் தாவா 4 ம் அயிட்ட சொத்தில் ஒரு பகுதியை 26 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய பத்திரத்தின்

ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.7**, நான் 29.09.2013ல் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.8, சார்வு செய்யப்பட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (எண்ணிக்கை 7) **வா.சா.ஆ.9,** சார்வு செய்யப்படாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறைகள் **வா.சா.ஆ.10** ஆக தாக்கல் செய்கிறேன்.